# தனது ஜனங்கள் தேவனை அறிந்து கொள்ள மோசே உதவினான்

**ஒரே உன்னத தேவனைப் பற்றிய மகிழ்ச்சியும் பயமும் தரும் சத்தியங்கள்.**

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் D4b என்ற பாடத்தைப் படிக்கவும்.

*புதிய மேய்ப்பர்களைப் பயிற்றுவிப்போருக்கான வழிகாட்டல்கள்,* A0f , என்ற பாடத்தை இதுவரை படிக்கவில்லை என்றால், இப்போது படிக்கவும்.

**ஜெபம்:** "எல்லாம்வல்ல இரக்கமுள்ள தேவனே, மோசேக்கு நீர் உம்மை எவ்வாறு வெளிப்படுத்தினீர் என்பதைக் கூறி, நீர் எப்படிப்பட்டவர் என்பதை மக்களுக்கு கூற எனக்கு உதவுவீராக."

**யோவான்: 1:17:** "நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது. கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின."

தற்போதைய தேவைகளுக்கு ஏற்றதும், உங்களுக்கு நேரம் இருப்பதுமான காரியங்களை இதில் இருந்து தெரிந்து கொள்ளவும்.

1. **இஸ்ரவேலராகிய தமது மக்களுக்கு தேவன் எவ்வாறு தம்மை வெளிப்படுத்தினார் என்பதைக் கற்றுக்கொள்ள உங்கள் மனதையும் இருதயத்தையும் ஆயத்தம் செய்யுங்கள்.**



- ஏறத்தாழ நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், விசுவாசியான ஆபிரகாமின் சந்ததியாம் இஸ்ரவேலரை தமது பரிசுத்த ஜனமாக தேவன் தெரிந்து கொண்டார்.
- ஐந்நூறு ஆண்டுகளுக்குப் பின்னர், தேவன் எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்து தமது மக்களை அதிசயமாக விடுவித்தார். மோசேயின் மூலமாகப் பழைய ஏற்பாட்டு உடன் படிக்கையை ஏற்படுத்தினார். அவர்கள் ஒரே, எல்லாம் வல்ல தேவனுக்கு பயந்து கீழ்ப்படிய கற்றுக் கொண்டனர். அவர்களது அனுபவங்கள் நமக்கு உதாரணங்களாகும் (1 கொரி 10:6).
- இரண்டாயிரம் வருடங்களுக்கு முன், இயேசு ஜனங்களுக்காக மரித்து உயிர்த்தெழுந்த பின், பழைய உடன்படிக்கையின் நியாயப் பிரமாணத்திற்குப் பதிலாக தேவன் புதிய கிருபையின் உடன் படிக்கையை எல்லா மக்களுக்காகவும் அளித்தார்.
- எகிப்தின் அரசன் ஏன் இஸ்ரவேலருக்கு பயந்து அவர்களுடைய எண்ணிக்கையை குறைக்க திட்டமிட்டான் என்பதை யாத்திராகமம் 1 ல் காண்க (பின்னர், இது போலவே, ஏரோது இராஜா புதிதாகப் பிறந்த இராஜாவாகிய இயேசுவை அழிக்க பெத்லகேமில் உள்ள ஆண் பிள்ளைகளை எல்லாம் கொன்றான்).
- குழந்தையான மோசேயை தேவன் மரணத்தில் இருந்து எவ்வாறு காத்தார் என்பதையும், தனது ஜனங்களை தனது சொந்த முயற்சியால் மோசே காக்க முயன்ற போது என்ன நடந்தது என்பதைப் பற்றியும் யாத் 2ல் காண்க.
- நித்திய தேவன் மோசேயை என்ன செய்ய அனுப்பினார் என்பதையும், தேவனின் பரிசுத்த நாமம் என்ன என்பதையும் யாத் . 3 ல் காண்க.

தெய்வங்கள் அல்லது நட்சத்திரங்கள் நமது விதியைப் பற்றி முன்கூட்டியே அறிந்திருக்கின்றன என்றும், நமது வறுமை, வலி, தோல்வி ஆகியவற்றைபற்றிய விதியை மாற்ற முடியாது என்றும் கூறும் கொடுமையான பிசாசின் கருத்தான விதியை ஏன் கிறிஸ்தவர்களாகிய நாம் புறக்கணிக்கிறோம் என்பதை விளக்க ஆயத்தப்படுக. நித்தியமாய் இருக்கிறவராய் இருக்கிறவர் ' காலத்திற்கு வெளியே வாழ்கிறவர்.

அவரே காலத்தைப் படைத்தவர். எனவே அது அவரை ஆளுகை செய்ய முடியாது. “காலம் வரும்” (மனிதனுடைய பார்வை) “அப்பொழுது” (தேவனுடைய பார்வை) அவர் மரித்தோரை ஜீவனுக்குள்ளும், நியாயத் தீர்ப்புக்குள்ளும் எழுப்புவார் என்று இயேசு கூறினார் (யோவான் 5:28–29). அவர், “ஆபிரகாமுக்கு முன்னும் நான் இருக்கிறேன்” என்று கூறினார் (யோவான் 8:58). அவர் காலம் (time) வெளி (space) ஆகிய இரண்டிலும் எங்கும் இருக்கிறார். எதிர்காலத்தில் நாம் என்ன செய்வோம் என்பதை அவர் பார்க்கிறார். ஆனால் அதைச் செய்ய எப்போதுமே அவர் காரணராய் இருக்கமாட்டார். அவரது முன்னறிவு, வாழ்க்கையை மாற்றும் முடிவுகளை எடுக்கும் நமது சுதந்திரத்தை இல்லாமல் ஆக்காது. “சத்தியம் உங்களை விடுதலையாக்கும்” என்று இயேசு கூறினார் (யோவான் 8:32). விதியின் கோரப் பிடியில் இருந்து உங்கள் மந்தையை விடுதலை ஆக்குங்கள். தேவன் நம்மை அறிகிறார்; நேசிக்கிறார்; கேட்கிறார். நமக்கு நன்மை பயப்பதும், அவருக்கு மகிமையுண்டாக்குவதுமான வழிகளில் அவர் குறுக்கிடுவார். நமது முன்னோர்கள் தெய்வங்களோ ஆவிகளோ இல்லை, மனிதர்களே என்றும், தேவன் காலத்தையும் பருவத்தையும் குறிக்கவே நட்சத்திரங்களைப் படைத்தார் என்றும் ஆதியாகமம் 1 கூறுகிறது.

**நாம் ஏன் பிசாசுகளின் வல்லமையில் இருந்து விடுதலையாகி இருக்கிறோம் என்பதை விளக்குக.**


**ஆயத்தப்படுக.** எகிப்தின் அரசன் அடிமைத்தனத்தில் இருந்து தேவனுடைய ஜனங்களை விடுவிக்காத போது தேவன் மோசேயின் மூலமாக வாதைகளை அனுப்பி பொய்யான எகிப்திய தெய்வங்களுக்கு மேலான தமது வல்லமையை வெளிப்படுத்தினார் (யாத்.7–11). தங்களது நைல் என்ற பெரிய நதிக்கு இயற்கைக்கு மேலான சக்தி இருக்கிறது என்று எகிப்தியர்கள் நம்பினார்கள். எனவே தேவன் தண்ணீரை இரத்தமாக மாற்றினார். அவர்கள் சூரியனை வணங்கியதால் அவர் அதை இருளாக்கினார். அவர்கள் விலங்குகளை வணங்கினார்கள். எனவே தேவன் மாடுகளையும், பேன்களையும், பூச்சிகளையும் தவளைகளையும் கொண்டு வேதனையைக் கொண்டு வந்தார். பொய்யான ஆவிகளின் பயத்தில் இருந்து உங்கள் மந்தையை விடுதலை ஆக்குமாறு ஒரே எல்லாம் வல்ல தேவனாகிய இயேசுவைக் கேளுங்கள்.


**மோசேயின் ஐந்து புத்தகங்கள், வேதாகமத்தின் பிற பகுதிகளுக்கு எவ்வாறு அடித்தளம் போட்டது** என்பதை விவரிக்க ஆயத்தமாகுக:

- **ஆதியாகமம்,** தேவன் எவ்வாறு ஒன்றும் இல்லாமையில் இருந்து எல்லாவற்றையும் உண்டாக்கினார் என்பதையும், சாத்தான் எவ்வாறு மனிதனை இச்சைக்கு உட்படுத்தி கீழ்ப்படியாமல் செய்து, உலகத்தை கெடுத்து, வேதனையையும் தண்டனையையும் மரணத்தையும் கொண்டு வந்தான் என்பதையும் வெளிப்படுத்துகிறது.
- எல்லா ஆவிகளுக்கும் மேலான எல்லாம் வல்ல சகல–பரிசுத்தரான தேவனை யாத்திராகமம் வெளிப்படுத்துகிறது. தேவன் பழைய பிரமாணத்தைப் பத்து கட்டளைகள் மூலமாகத் தமது மக்களுக்கு அளித்தார்.
- ஒரு குற்றமற்ற பலியின் மூலமாக தேவன் மக்களின் பாவத்தை எவ்வாறு மன்னித்தார் என்பதை லேவியராகமம் வெளிப்படுத்துகிறது.
- தேவனுடைய நியாயப்பிரமாணத்தைக் கடைபிடிக்க மக்கள் எவ்வாறு தவறினார்கள் என்பதை எண்ணாகமம் விவரிக்கிறது. தேவன் அந்தத் தலைமுறையினரை வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்திற்குள் நுழைய அனுமதிக்கவில்லை.
- தேவன் பாவத்தைத் தண்டித்து கீழ்ப்படிதலை ஆசீர்வதிக்கிறார் என்பதை உபாகமம் வெளிப்படுத்துகிறது.
- பழைய நியாயப்பிரமாணங்களும், நிகழ்ச்சிகளும் மாபெரும் புதிய ஏற்பாட்டு உண்மைகளைப் புரிந்துகொள்ள நமக்கு உதவுகின்றன.
- இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் மூலமாக, மனந்திரும்பிய பாவிகளுக்கு மன்னிப்பும் நித்திய வாழ்க்கையும் உண்டு.

- நமக்குள் வாழ்ந்து தேவனுக்குக் கீழ்ப்படியும் வல்லமையைத் தரும்படி பரிசுத்த ஆவியானவரை அனுப்ப தமது பிதாவை நோக்கி இயேசு வேண்டிக் கொண்டார்.
- கிறிஸ்துவின் சரீரமாகிய அங்கத்துக்குள் ஒருவருக்கு ஒருவர் சேவை செய்ய வெவ்வேறு விதமானத் திறமைகளை எல்லா விசுவாசிகளும் தேவனிடம் இருந்து பெற்றுக் கொள்கின்றனர்.
- மரித்தோரை எழுப்பவும், மனந்திரும்பாதவர்களைத் தண்டிக்கவும், விசுவாசிகளின் சரீரத்தை மறுரூபம் ஆக்கவும், அவரை முகமுகமாய்க் கண்டு, மகிமைப்படுத்தி நித்தியமாய் அவருக்குள் களி கூரவும், தக்க மகிமையான இடத்திற்கு நம்மை அழைத்துச் செல்லவும், இயேசு திரும்பவும் வருவார்.

**10. கட்டளைகள்**




2. **இந்த வாரத்தில் செய்ய வேண்டிய காரியங்களை உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்.**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை கொள்கைகளைத் தவறாகப் புரிந்து கொண்டுள்ள விசுவாசிகளை சந்தித்து ஆலோசனை கூறி ஜெபிக்கவும்.

நீங்கள் பயிற்றுவிக்கும் தலைவர்களுக்கு இந்த போதனை தேவைப்பட்டால் அவர்கள் ஆயத்தமாவதற்கு உதவவும்.

3. **வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்.**

**பண்டைய இஸ்ரவேலர்களை சமுதாய அடிமைத்தனத்தில் இருந்து விடுவிக்க மோசேயை தேவன் எவ்வாறு ஆயத்தப்படுத்தினார் என்பதை விளக்கவும்.** (மேலே)

- பெத்லகேமில் சிறு ஆண் குழந்தைகளை ஏரோது கொன்றது போல, எகிப்தின் அரசன் என்ன செய்தான் என்பதைக் கேட்டு விவாதிக்கவும்.
- மோசேயை தேவன் எவ்வாறு காத்தார் என்பதையும், மோசே தன் சொந்த முயற்சியால் தன் மக்களை எவ்வாறு இரட்சிக்கு முயன்றான் என்பதையும் கூறுமாறு விசுவாசிகளிடம் கேட்கவும்.

**நாம் ஏன் விதிக்கொள்கையை ஏற்க மறுக்கிறோம் என்பதையும், நாம் ஏன் பிசாசிகள் அதிகாரத்திற்கு நீங்கி இருக்கிறோம் என்பதையும் விளக்கவும்.** (மேலே பகுதி 1)

தேவனின் பரிசுத்த நாமமான "இருக்கிறவராய் இருக்கிறேன்" என்பது அவர் நித்திய காலமாய் இருக்கிறவர் என்பதை எவ்வாறு உணர்த்துகிறது என்பதை விளக்கவும்.

காலத்திற்கு வெளியே வாழ்வதால் உண்டாகும் தேவனுடைய முன்னறிவு நமது தெரிந்து கொள்ளும் உரிமையை ஏன் அழிப்பதில்லை என்பதைக் கேட்டு விவாதிக்கவும். (நாம் எதிர்காலத்தில் செய்யும் படி முடியவெடுக்கப்போவதை தேவன் பார்த்தாலும், அதற்கு அவர் காரணமாய் இருப்பதில்லை).

சத்தியம் நம்மை விடுதலையாக்கும் என்று இயேசு கூறியதின் அர்த்தத்தைக் கேட்டு விவாதிக்கவும்.

மோசே எழுதிய ஐந்து புத்தகங்களையும் அறிவது இயேசுவைப் பற்றிய உண்மையைப் புரிந்து கொள்ள மக்களுக்கு எவ்வாறு உதவும் என்பதை **விளக்கவும்.**

**பிள்ளைகள்** தாங்கள் தயாரித்தவற்றை வழங்கட்டும்.

நம்மை முடக்கி வைக்கும் விதி பற்றிய கருத்தில் இருந்தும், தீய ஆவிகள் மற்றும் பொய்யான தெய்வங்களுக்கு அடிமைகளாக இருப்பதில் இருந்தும் கிறிஸ்து எவ்வாறு விடுவித்தார் என்பது குறித்து விசுவாசிகள் **சாட்சிகளைக்** கூறட்டும்.

யாத்திராகமம் 7:17 ஐ வாசித்து கர்த்தரின் பந்தியை அறிமுகப் படுத்தலாம். மோசேயின் முதலாவது அற்புதம் தண்ணீரை இரத்தமாக மாற்றியது. இது பழைய ஏற்பாட்டு பிரமாணங்களின்படியான ஒரு சாபமாகும். அதன்படி மக்கள் கீழ்ப்படிந்தார்கள் அல்லது மரித்தார்கள். (பிரமாணத்தின்) எழுத்து கொல்லுகிறது. (2 கொரி.3:6). இதற்கு மாறாக இயேசுவின் முதல் அற்புதமானது தண்ணீரை திராட்சை ரசமாய் மாற்றி மக்களை ஆசீர்வதித்ததாகும் (யோவான் 2:1-11). இயேசு ஐக்கியவிருந்தின் பானத்தைக் குறித்து, "இது என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கை" என்றார் (லூக்கா 22:20).

இயேசுவைப் பற்றிய அடிப்படை உண்மைகளை நண்பர்களுக்கு போதிக்கும் திட்டங்களை வகுக்கவும், ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கவும் இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய குழுக்களை அமைக்கவும்.

சேர்ந்து 1 கொரி 10:5-6 ஐ மனப்பாடம் செய்க.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net